11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

95. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(G)த் துறையின் 29–11–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 176–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) 89(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. 2016–2017 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

97. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

98. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஆண்டுக் கணக்கு மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

203. 2015–2016 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டுக் கணக்கு. (தமிழ்)

204. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (ஆங்கிலம்)

205. மானியக் கோரிக்கை எண் *15*–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2018–2019.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

206. சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய செயலாக்க வரவு செலவுத் திட்டம், *2018–2019.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

207. மானியக் கோரிக்கை எண் *10*–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2018–2019.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

208. வணிக வரித் துறை பற்றிய குடிமக்கள் சாசனம், *2018.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

209. மானியக் கோரிக்கை எண் *11*–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2018–2019.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

210. பதிவுத் துறை பற்றிய குடிமக்கள் சாசனம், *2018.* (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

211. "வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் வரலாற்றுச் சாதனைகள், *2011–2018*" என்கிற சிறுநூல். (தமிழ்)

212. காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2018–2019.* (தமிழ்)

213. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2018–2019.* (தமிழ்)